முருகப்பெருமான் துணை

**மகான் இராமதேவர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**01.10.2022**, சனிக்கிழமை

1. வடிவேலனார் மகா சூட்சுமமாக
   வரம்பல வாரி வழங்கி
   நாடிவரும் மக்கள் கூட்டத்தை
   ஞானிகளாக்கும் வல்லமை கொண்ட
2. கொண்டநல் ஆறுமுக அரங்கனே
   குவலயம் உன் அனுகூலம் பெற
   உண்டாகும் ஞானலோக மாற்றமாக என
   உன் பெருமை கூறி அனுகூல ஆசி
3. ஆசிதனை சுபகிருது தரிவை திங்கள்
   அறிவிப்பேன் முன்னான்கீர் திகதி காரிவாரம்
   (சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 14 ம் நாள், 01.10.2022 சனிக்கிழமை)
   ஆசிதனை இராமதேவர் யானும்
   அகிலம் நன்மை அடைய வேண்டி
4. வேண்டிவர பிரணவக்குடிலில்
   வினை நீக்கும் வல்லமைதனை
   கண்டடைவர் மக்கள் தானப்பா
   கருணையாக மனிதன் வாழ்ந்திட
5. வாழ்ந்திட தயவை விதைக்கின்ற
   வாழும் ஞானி ஆகி உபதேசம்
   ஊழ்தனை மட்டுமல்ல காலனையும்
   உடன் அகற்றி காத்தருளுமப்பா
6. அப்பனே பிரணவக்குடில் தன்னில்
   அரங்கமகான் மட்டும் இல்லை
   சுப்பனுடன் உலக ஞானிகளும்
   சுற்றி நின்று காப்பு வேலியிட்டு
7. வேலியிட்டு அரங்கனை நாடி
   வேண்டி வந்தவர் எவரும்
   பழிபாவச் சோடை கண்டுவிடா
   பாதுகாப்புடன் வாழ அருளிவர
8. வருபவர் தன் வினை வெல்வதுடன்
   வருமுலகில் தன் குடியவர்க்கும்
   தருகின்ற குணமுள்ள சுற்றும்
   தன்வழி மித்திர சகலருக்கும்
9. சகலருக்கம் வழிகாட்டுகின்ற
   சாற்றிடுவேன் ஞானவானாக
   செகத்தினில் சிறந்து இனிதே
   செப்பிடுவேன் சித்திகளும் அடைவர்

10. அடைவரே அரங்கனை நாடிவர
அனைத்து மகா சக்திகளின்
சோடையிலா அனுகூலம் பெற்று
சுத்தநெறி கண்ட ஞானிகளாகவே

11. ஆகவே மாற்றம் கண்டு
அரங்கன் வழித் தேறியே
செகத்தினில் ஞான ஆட்சிபடைப்பர்
செப்பிய அனுகூல ஆசி முற்றே

–சுபம்–